**சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - 2019**

சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூன் 26 ஆந் திகதிய 2000001843 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 9.03 ஆம் பிரிவு மற்றும் 2017 நவம்பர் 21 ஆந் திகதிய 2000001984 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சனாதிபதி செயலகம் தற்போது விவசாய அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்காக (எஸ்ஏபிபி) ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. இலங்கையின் சிறுநிலவுடமையாளர்களின் வறுமை குறைப்பு மற்றும் போட்டித்திறனிற்கு பங்களிப்புச் செய்வதும் வணிகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவு தரத்தை நிலையாக அதிகரிப்பதும் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,172.42 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.04 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,893.58 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.40 மில்லியனை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. மிகுதி தொகையில் ஐ.அ.டொலர் 19.4 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினாலும் ஐ.அ.டொலர் 9.8 மில்லியன் பங்குபற்றும் நிதி நிறுவனங்களினாலும், ஐ.அ.டொலர் 17 மில்லியன் தனியார் துறையால் இணைந்து நிதியளிக்கப்பட்டும் ஐ.அ.டொலர் 4.5 மில்லியன் பயனாளி பங்களிப்பிலிருந்தும் நிதியளிக்கப்பட்டன. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை சர்வதேச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (ஐபிஎஸ்ஏஎஸ்) மற்றும் ஐஎவ்ஏடி ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிகழ்ச்சித்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| தொடர் இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | ஆபத்து விகிதம் | தாக்கங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வாகனங்களின் பொருட்டு பெறப்பட்ட ரூபா 58,023,311 அரசாங்க பங்களிப்பு வாகனங்களாக தனித்தனியாக வெளிப்படுத்தப்படாமல் பணவளிப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது. | 58.02 | நடுத்தரம் | நிதிக்கூற்றுக்களில் முறையற்றவாறு வெளிப்படுத்தல். | இது பணவளிப்பின் கீழ் உபகரணம் மற்றும் மூலப்பொருட்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்திற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னர் குடியிருந்த அலுவலகக் கட்டிடம் தொடர்பான ரூபா 3,294,600 மீளளிக்கத்தக்க வைப்பு பெற வேண்டியவைகளாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் கிரயங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 3.29 | நடுத்தரம் | நிதிக்கூற்றுக்களில் முறையற்றவாறு வெளிப்படுத்தல். | இது பணவளிப்பின் கீழ் மீண்டெழும் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மீளளிக்கத்தக்க வைப்பு பெறவேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து | 137.12 | நடுத்தரம் | நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் ஏனைய சான்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை. | ஆண்டின் போது எஸ்ஏபிபி ஆல் பணவளிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் சீபீஎஸ்எல் இல் 2020 சனவரி 08 இல் தேறியிருந்த ரூபா 9,966,031.93 | ஏனைய சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தகவல்களின் பிரகாரமும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | (ஆர்டிடி) பெறப்பட்ட உறுதிப்படுத்தலிற்கும் இடையே கடன் கூறு தொடர்பாக ரூபா 137,128,149 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | | | தொகையான வழியிலுள்ள காசு காரணமாக வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி பிரிவின் கணக்கில் காணப்பட்ட ரூபா 246,162,117 மீதி நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சித்திட்ட கடன் கூறின் செலவினமாக கருதப்பட்டிருந்தது. | 246.16 | நடுத்தரம் | நிதிக்கூற்றுக்களில் செலவினம் ரூபா 246,162,117 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டமை. | ஐஎவ்ஏடி அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களிற்கு உள்ளபடியான செலவினம் கொண்டுவரப்பட வேண்டும். |
| (உ) | மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த சொத்துக்களின் பெறுமதியானது வரலாற்றுக் கிரயம், பிரதியிடல் கிரயம் மற்றும் உள்ளபடியான கிரயம் போன்ற மூன்று வெவ்வேறு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டு மீள்பெறுமதியிடப்படாமல் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | 20.53 | நடுத்தரம் | சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து வெளிப்படுத்தப்படுத்தப்பட்டமை. | எஸ்ஏபிபி ஆல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் காட்டப்படுகின்றதுடன் எஸ்ஏபிபி இற்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் பணி இணங்கப்பட்ட நடவடிக்கைகளின் போது வழங்கப்பட்ட ஐஎவ்ஏடி அறிவுறுத்தலின் பிரகாரம் பெறுமதியிடப்பட்டிருந்தன. | சரியான பெறுமதி கணிப்பீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 332,806,639 பயனாளி பங்களிப்பு பெறுமதியை இனங்காண்பதற்கு சரியான | 595.99 | நடுத்தரம் | பயனாளி பங்களிப்பினதும் கம்பனி | விவசாயி பங்களிப்பு – விவசாயி பங்களிப்பை கணிப்பீடு செய்வதற்காக | விவசாயிகள் மற்றும் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட பயனாளி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி கணிப்பீட்டு முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் நிகழ்ச்சித்திட்ட பங்களிப்பின் பெறுமதி கணிப்பீட்டிற்காக வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட சரியான முறையை பிரயோகிப்பதற்குப் பதிலாக ஆண்டின் நடுப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு குறித்த சில சந்தர்ப்பங்களில் ரூபா 263,183,194 கம்பனி பங்களிப்பு இனங்காணப்பட்டிருந்தது. | | | பங்களிப்பினதும் உள்ளபடியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து அல்லது குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்பட்ட வழிகாட்டல் (பின்னிணைப்பு 7) தங்களது குறிப்பிற்காக இணைக்கப்பட்டுள்ளது. எனினும் முன்மொழியப்பட்ட எம்ஜஎஸ் உடன் கம்பனி மற்றும் பயனாளி பங்களிப்பு எதிர்கால நிதிக்கூற்றுக்களில் மிகவும் சரியாக மதிப்பிடப்பட முடியும். | பங்களிப்புக்களிற்காக சரியான பெறுமதி கணிப்பீட்டு முறைகள் இனங்காணப்பட வேண்டும். |
| (எ) | முன்னர் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமான தேசிய வேளாண்மைத் தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து (என்ஏடிஈபி) பெறப்பட்ட ரூபா 58,023,311 தொகையான மூன்று மோட்டார் வாகனங்களின் பெறுமதி உரிமைத்துவம் மாற்றப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும் சனாதிபதி செயலகத்திலிருந்து | 58.02 | நடுத்தரம் | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி வாகனங்களின் உரிமைத்துவம் மாற்றப்படாததால் அதிகரித்து/ குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வாகனங்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் மேலதிக தாமதமின்றி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட வேண்டும். |

பெறப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் அவற்றின் உரிமைத்துவம் மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| தொடர் இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள்/ கணக்காய்வு விடயங்கள் | ஆபத்து விகிதம் | தாக்கங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட பதவியணி முகாமைத்துவம் தொடர்பான 2019 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>(i) பந்தி இல. 2.3.3(அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து நியமனங்களும் 6 மாத தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டு ஒரு ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததன் விளைவாக குறுகிய காலப்பகுதியினுள் சில உத்தியோகத்தர்கள் பதவி விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நடுத்தரம் | நலிவான மனித வள முகாமைத்துவம் | அரசாங்க சேவையில் இணைந்துகொள்ளல், தொழில் மேம்பாடு, உயர் கல்விக்காக வெளிநாடு செல்லல், திருமணம், 5 ஆண்டு இரண்டாம் காலப்பகுதியை பூர்த்தி செய்தல் போன்ற தனிப்பட்ட காரணங்களினாலும் எஸ்ஏபிபி இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள ஏனைய சில தனிப்பட்ட காரணங்களினாலும் அவர்களது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகியிருந்தனர். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ii) | பந்தி இல. 2.3.3(அ) | அப் பதவிக்காக 2014 ஏப்ரல் 30 இல் விடுவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முகாமையாளர் பதவியின் ஐந்து ஆண்டு காலம் 2019 ஏப்ரல் 30 இல் முடிவுறுத்தப்பட்டது. பின்னர் 2019 மே 02 ஆம் திகதிய ஜனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர் நிகழ்ச்சித்திட்டத்தில் 05 ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் 2019 மே 02 இல் சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிட்டிருந்தார் எனினும், 2019 யூன் 23 ஆம் திகதிய பிஎஸ்/எஸ்டி/எஸ்ஏபிபி/எச்ஆர்/ 20/2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மேற்படி உத்தியோகத்தர் 2019 மே 01 தொடக்கம் 2019 மே 23 வரை நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீண்டும் அறிக்கையிட்டிருந்தார். ஆனால், அவ் உத்தியோகத்தர் 2019 மே 23 இல் 60 வயதை பூர்த்தி செய்த பின்னர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த போதிலும் 2019 மே 01 தொடக்கம் 2019 மே 23 வரையுள்ள உரிய காலப்பகுதிக்கான சம்பளம் | குறைவு | நலிவான மனித வள முகாமைத்துவம் | அரச சேவையிலிருந்து உத்தியோகத்தர் ஓய்வு பெற்றிருந்த போதிலும் அது நிதி முகாமையாளராக செயற்திட்ட சேவையில் தொடர்வதற்கு தடையொன்றாக காணப்படுவதில்லை. மேலும், அவர் எஸ்ஏபிபி இற்கு உள்ளீர்க்கப்பட்ட போது ஓய்வு பெற்ற பின்னர் நிதி முகாமையாளராக சேவையை தொடர்வதற்கு அவர் ஒப்புதல் வழங்கியிருந்தார். | பிரமாணங்களுடன் இணங்க வேணடியதுடன் அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 05 ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்கத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தில் பணிபுரிவதற்கு உண்மையான பதவியிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட முடியும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சனாதிபதி செயலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேற்படி காரணத்தின் விளைவாக 2019 மே 01 தொடக்கம் 2019 மே 23 வரை நிதி முகாமையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.<br><br>நிதி முகாமையாளர் பதவிக்கான ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் நியமனம் ஐந்து ஆண்டுகளின் பின்னரும் தொடர்ச்சியாக நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 யூலை 01 இல் சம்பள ஏற்றத்துடன் அவ் உத்தியோகத்தருக்கு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | | | | |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 மற்றும் 09/2009(I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டவாறு கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி உத்தியோகத்தர்களின் வருகையை பதிவு செய்வதற்கு பீஎம்யூ ஆல் கைகள் மூலமான வருகை பதிவேடொன்று இதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. | நடுத்தரம் | முறையற்ற மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் மற்றும் வருகை பதிவேட்டில் முறைகேடுகள் | கைவிரல் அடையாள இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்களின் அலுவலகத்திற்கான வருகை மற்றும் அலுவலகத்திலிருந்தான வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்துவதற்காக பதிவேடொன்று பேணப்பட வேண்டும் |

என்று அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

<table>
<tr><th>தொடர் இல.</th><th>கூறுகள்</th><th>கணக்காய்வு விடயங்கள்</th><th>ஆபத்து விகிதம்</th><th>தாக்கங்கள்</th><th>முகாமைத்துவ பதில்கள்</th><th>கணக்காய்வாளரின் பரிந்துரைகள்</th></tr>
<tr><td>(அ)</td><td>ஒட்டுமொத்த பௌதீக செயன் முன்னேற்றம்</td><td>வணிக ரீதியான பங்குடமைக்கான நுழைவு மற்றும் கிராமிய நிதிக்கான நுழைவு என பெயரிடப்பட்ட 02 கூறுகளை நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் கொண்டிருந்தன. நிகழ்ச்சித்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கூறின் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலி</td><td>நடுத்தரம்</td><td>2023 யூன் 30 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் 3½ ஆண்டு மிகுதி காலப்பகுதியின் போது நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான சாத்தியத் தன்மை பௌதீக செயலாற்றல் தொடர்பான செயன் முன்னேற்றம் மெதுவாக காணப்படுவதன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது.</td><td>2020 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் கடப்பாடுகளுடன் 24% ஆக பின்வருமாறு காணப்படுகின்றது. ஆகையால் புதிய கொள்கை முயற்சிகள் மற்றும் தலையீடுகளுடன் எம்ரீஆர் மற்றும் அரசாங்கத்தின் ஈடுபாட்டின் போது ஐஎவ்ஏடி அங்கீகரித்த தந்திரோபாயங்களுடன் ஒட்டுமொத்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எஸ்ஏபிபியால் முடியும்.
<table>
<tr><th>ஒட்டுமொத்த செயன் முன்னேற்றம்</th><th>6 ஆண்டுகளிற்கான செயற்திட்ட பெறுமதி</th><th>திரண்ட பணவளிப்புக்கள்</th><th>கடப்பாடுகள்</th><th>மொத்தம்</th><th>செயன் முன்னேற்றம் %</th></tr>
<tr><td>பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்களில்</td><td>105</td><td>13</td><td>மானியங்கள் - 3.6<br>கடன்கள் - 4.2</td><td>21</td><td>20</td></tr>
<tr><td>பெறுமதி இலங்கை ரூபா மில்லியன்களில்</td><td>17,171</td><td>2,306</td><td>மானியங்கள் - 647<br>கடன்கள் - 761</td><td>3,714</td><td>21</td></tr>
</table>
2020 மார்ச் தொடக்கம் யூன் வரையான 4 மாத காலப்பகுதியில் கொவிட் பெருந்தொற்றின் போது ஏற்பட்ட இடையூறு காரணமாக செயன்முன்னேற்றம் மெதுவாக காணப்படுகின்றது.</td><td>நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ருந்து 2½ ஆண்டுகள் கடந்த பின்னரும் 11.11 சதவீதமாக காணப்பட்டன.</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>(ஆ)</td><td>ஒட்டுமொத்த நிதி செயன் முன்னேற்றம்</td><td>2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு சனாதிபதி செயலாளரின் கீழ் ரூபா 2,044.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் திருத்தப்பட்ட வருடாந்த பாதீட்டில் அவை தொடர்பாக ரூபா 2,600 மில்லியன் தொகையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 63 சதவீதத்தை பிரதிறித்தித்துவப்படுத்துகின்ற ரூபா 1,654.25 மில்லியன் தொகையை</td><td>நடுத்தரம்</td><td>2023 யூன் 30 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் 3½ ஆண்டு மிகுதி காலப்பகுதியின் போது நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்ளும் சாத்தியத்தன்மை நிதிச் செயலாற்றல் தொடர்பான செயன்முன்னேற்றம் மெதுவாக காணப்படுவதன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது.</td><td>2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த நிதிச் செயன்முன்னேற்றம் 16 கைச்சாத்திடப்பட்ட 4P உடன்படிக்கைகளின் கடப்பாடுகளை கருத்தில் கொள்ளும் போது 21% காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.<br><br>
<table>
<tr><th>ஒட்டுமொத்த செயன் முன்னேற்றம்</th><th>6 ஆண்டுகளிற்கான செயற்திட்ட பெறுமதி</th><th>திரண்ட பணவளிப்புக்கள்</th><th>கடப்பாடுகள்</th><th>மொத்தம்</th><th>செயன் முன்னேற்றம் %</th></tr>
<tr><td>-------------</td><td>--------</td><td>-------</td><td>-----------</td><td>-------</td><td>-----</td></tr>
<tr><td>பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்களில்</td><td>105</td><td>13</td><td>மானியங்கள் - 3.6<br>கடன்கள் - 4.2</td><td>21</td><td>20</td></tr>
<tr><td>பெறுமதி இலங்கை ரூபா மில்லியன்களில்</td><td>17,171</td><td>2,306</td><td>மானியங்கள் - 647<br>கடன்கள் - 761</td><td>3,714</td><td>21</td></tr>
</table>
<br>திருத்தப்பட்ட ஏடபிள்யூபிபீ இற்கு எதிராக 2019.12.31 இல் உள்ளவாறான வருடாந்த செயன்முன்னேற்றம் 65% ஆக காணப்படுகின்றது.</td><td>நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள்நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மாத்திரமே நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தியிருந்தது. | | | | |
| (இ) | மானிய பணவளிப்பு | 2019 ஆம் ஆண்டிற்கான மானிய பணவளிப்பின் கீழ் இலக்கிடப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 5,500 ஆகும். எனினும், ஆண்டின் போது உள்ளபடியான மானிய பணவளிப்பு செய்யப்பட்டமை 4,502 பயனாளிகளிற்காக மாத்திரமே ஆகும். கொல்லைப்புற கோழி வளர்ப்பு செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகள் 500 ஆக இருந்ததுடன் 94 பயனாளிகளுக்கு மாத்திரமே பணவளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் கறுவா பயிர்ச்சிசெய்கைக்காக இலக்கிடப்பட்ட மொத்த பயனாளிகள் 140 ஆக காணப்பட்ட அதே நேரம் 40 | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் ஆதரவாளர்களிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் முடியாதிருந்ததால் பயன்படுத்தப்படாத நிதிகள் தொடர்பாக ஐடிஏக்கு கடப்பாட்டுக் கட்டணங்களை திறைசேரி செலுத்த வேண்டியிருந்தது. | மானிய பணவளிப்பு செயன்முன்னேற்றம்<br><br>**விபரம்** \| **#** \| **பெறுமதி ரூபா மில்லியனில்**<br>---------- \| ---- \| --------------<br>கைச்சாத்திடப்பட்ட 4P செயற்திட்டங்கள் \| 16 \|<br>உடன்படிக்கை காலப்பகுதியின் போது பயனாளிகள் \| 15,729 \| 970<br>2019.12.31 வயையான பயனாளிகள் இலக்கு \| 5,500 \| 446<br>பணவளிப்பு செய்யப்பட்ட மானியங்கள் \| 4,502 \| 161<br>கையிலுள்ள உரிமைக் கோரிக்கைகள் \| 66 \| 3<br>செயன்முன்னேற்றம் \| 82 \| 36<br><br>இணங்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதியின் போது 500 விவசாயிகளுக்கு உணவு வழங்குவதற்கு 2019 சனவரியில் கொல்லைப்புற கோழி வளர்ப்பு செயற்திட்டம் கைச்சாத்திட்டப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் இலக்கு 250 விவசாயிகளாகும். 2019 திசெம்பர் 31 அளவில் 94 விவசாயிகளிற்கு ரூபா 5.8 மில்லியன் தொகையான மானியங்கள் பணவளிப்பு செய்யப்பட்டிருந்தன. தற்போது (2020.08.31) செயற்திட்டத்தின் வெவ்வேறு கட்டங்களில் 350 விவசாயிகள் பௌதீக ரீதியாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள்நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

<table>
<tr><td></td><td></td><td>பயனாளிகளுக்கு மாத்திரமே மானியம் வழங்கப்பட்டிருந்தது.</td><td></td><td></td><td>இணங்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதியின் போது 140 விவசாயிகளுக்கு உணவு வழங்குவதற்கு 2019 பெப்ரவரியில் கறுவா செயற்திட்டம் கைச்சாத்திட்டப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் இலக்கு 140 விவசாயிகளாகும். 2019 திசெம்பர் 31 அளவில் 40 விவசாயிகளிற்கு ரூபா 2.26 மில்லியன் தொகையான மானியங்கள் பணவளிப்பு செய்யப்பட்டிருந்தன. தற்போது (2020.08.31) செயற்திட்டத்தின் வெவ்வேறு கட்டங்களில் 61 விவசாயிகளிற்கு ரூபா 3.45 மில்லியன் தொகையான மானியங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 142 விவசாயிகளிற்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.</td><td></td></tr>
<tr><td>(ஈ)</td><td>கடன் கூறு</td><td>கடன் கூறின் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15,223 பயனாளிகளை மேவுகை செய்வதன் மூலம் பதினைந்து பொது-தனியார்-உற்பத்தியாளர்-பங்குடமை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை கடன் பணவளிப்புச் செய்யப்படுவதற்கு 7,499 பயனாளிகளை நிகழ்ச்சித்திட்டம் இலக்கிட்டிருந்ததுடன் அதில் 6,091 பயனாளிகள் இலங்கை மத்திய</td><td>நடுத்தரம்</td><td>நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் ஆதரவாளர்களிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் முடியாதிருந்ததால் பயன்படுத்தப்படாத நிதிகள் தொடர்பாக ஐடிஏக்கு கடப்பாட்டுக் கட்டணங்களை திறைசேரி செலுத்த வேண்டியிருந்தது.</td><td>கடன் செயன்முன்னேற்றம் (4P மற்றும் இளையோர் கடன்கள்)
<table>
<tr><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>பெறுமதி ரூபா மில்லியனில்</th><th>செயன்முன்னேற்றம் %</th></tr>
<tr><td>----------</td><td>---------</td><td>----------</td><td>------</td></tr>
<tr><td>4P கடன் செயன்முன்னேற்றம்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>கைச்சாத்திடப்பட்ட 4P செயற்திட்டங்கள்</td><td>15</td><td></td><td></td></tr>
<tr><td>உடன்படிக்கை காலப்பகுதியின் போது 4P பயனாளிகள்</td><td>15,223</td><td>1,980</td><td></td></tr>
<tr><td>2019.12.31 வரை 4P பயனாளிகள் இலக்கு</td><td>7,499</td><td>1,300</td><td>100</td></tr>
</table></td><td>நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள்நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| வங்கியில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 5,219 பயனாளிகளுக்கு மாத்திரம் ரூபா 1.037 மில்லியன் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | சீபீஎஸ்எல் இல் 4P இற்காக பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் | 6,091 | 1,105 | 96 |
| | PFIs ஆல் பணவளிப்பு செய்யப்பட்ட கடன்கள் | 5,219 | 1,037 | 82 |
| | சீபீஎஸ்எல் ஆல் மீள் நிதியிடப்பட்டமை | 4,916 | 980 | 76 |
| | **இளையோர் கடன் செயன்முன்னேற்றம்** | | | |
| | 2019.12.31 வரையான இலக்கு | 500 | 185 | 100 |
| | பதிவு செய்யப்பட்ட இளையோர் கடன்கள் | 299 | 151 | 81 |
| | பணவளிப்பு செய்யப்பட்ட இளையோர் கடன்கள் | 66 | 32 | 17 |
| | மீள் நிதியிடப்பட்ட இளையோர் கடன்கள் | 33 | 14 | 8 |
| | வருமானம் ஈட்டும் (ஐஜீ) கடன் செயன்முறை | | | |
| | பணவளிப்பு செய்யப்பட்ட மற்றும் மீள்நிதியிடப்பட்ட ஐஜீ கடன்கள் | 527 | 106 | |

**3.2 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| தொடர் இல. | கணக்காய்வு விடயங்கள் | ஆபத்து விகிதம் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | கொனகல விவசாய உற்பத்தித்திறன் கிராமம் தொடர்பான உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட பணவளிப்புத் திட்டத்தின் பிரகாரம் 2019 செப்தெம்பர் மாதத்தின் போது கொதிக்கும் பீப்பாய் மற்றும் உப பாகங்கள் மற்றும் தள்ளுவண்டில் என்பவற்றை வழங்குவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு இணங்கியிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அத்தகைய உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதற்காக குறிப்புரைகள் இறுதிப்படுத்தப்பட்டு செயற்படுத்துநரிற்கு (Promoter) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2020 மார்ச் மாதத்தின் போது அறுவடை தொடங்கப்படவுள்ளது. அறுவடைக்கு முன்னர் செயற்படுத்துநரால் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளது. | உடன்படிக்கைகள் மற்றும் பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொனகல விவசாய உற்பத்தித்திறன் கிராமம் தொடர்பான உடன்படிக்கையின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் கடனிற்கான ஆகக்கூடிய வட்டி விகிதம் வருடாந்தம் 6.5 சதவீதமாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து (சீபீஎஸ்எல்) மீள் நிதியளிக்கப்படும் திகதி வரை செயற்படுத்துநர் வங்கி 16 சதவீத வட்டிவீதத்தை அறவிட்டிருந்தது. | நடுத்தரம் | உயர் வட்டி விகிதத்தை அறவீடு செய்வதன் மூலம் விவசாயிகள் பாதிப்படைவார்கள். | வங்கி அதனது சாதாரண விலைவிகிதத்தில் கடன் தொகையை விடுவித்திருந்ததுடன் தொடர்ந்து 4P உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 6.5% எஸ்ஏபிபி வட்டி விகிதத்திற்கு மாற்றியிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி விகிதத்தை இழிவுபடுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொனகல விவசாய உற்பத்தித்திறன் கிராமம் தொடர்பாக காப்புறுதியை வழங்கும் பொருட்டு தனிநபர் வங்கி கணக்குகளில் ரூபா 2,770 தொகை | நடுத்தரம் | அனர்த்தம் காரணமாக எதிர்பார்க்கப்படாத நட்டம் தொடர்பாக | வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு காப்புறுதி கட்டுப்பணமாக காணப்பட்ட ரூபா 2,770 தொகை பயனாளிகளுக்கு | மேலதிக தாமதமின்றி காப்புறுதித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்டிருந்த போதிலும் அத்தகைய காப்புறுதி திட்டம் கணக்காய்வு திகதி வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | விவசாயிகள் பாதிப்படைவார்கள். | விடுவிக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கொல்லைப்புற கோழி வளர்ப்புச் செயற்திட்டம் தொடர்பாக 2018 திசெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரை பணவளிப்பு திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. 2019 சனவரி 04 மற்றும் 2019 பெப்ரவரி 26 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | நடுத்தரம் | இது சட்ட பிரச்சனைகள் ஏற்படுவதற்கு காரணமாகலாம். | சாதாரணமாக என்எஸ்சீ அங்கீகாரம் மற்றும் ஜஎவ்ஏடி ஆட்சேபனையில்லாமை என்பவற்றின் பின்னர் 4P உடன்படிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு ஆரம்பிக்கப்படுகின்ற அதே நேரம் இனங்காணப்பட்ட விவசாயிகளுடன் பூர்வாங்க நில வேலை ஆரம்பிக்கப்படுகின்றது. உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல் ஓய்வற்ற நேர அட்டவணைகளை கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் கிடைப்பனவில் தங்கியுள்ளது. | பணவளிப்பு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய காலத்தில் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பால்ப்பண்ணை செயற்திட்டத்திற்கான உடன்படிக்கையின் 10(அ) பந்தியின் பிரகாரம் செயற்திட்டக் காலப்பகுதி இரண்டு ஆண்டுகளாகும். ஒரு ஆண்டு காலப்பகுதி முடிவடைந்திருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை இச் செயற்திட்டத்தின் கீழ் எந்தவொரு விவசாயியும் பதிவு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் பயனாளிகளுக்கு மானிய பொருட்களை வழங்குவதற்கு முறையே 2018 திசெம்பர், 2019 சனவரி | நடுத்தரம் | நடவடிக்கைகள் தாமதமடைவதற்கு இது காரணமாகலாம். | செயற்படுத்துநர் கம்பனி 2018 ஆகஸ்ட் 18 இல் புவியியல் பகுதி மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் மாதிரி என்பவற்றை மாற்ற வேண்டும். ஆகையால் திருத்தங்களை இறுதியாக்குவதற்கு காலம் எடுக்கின்றது. சீஆர்ஜபீ மற்றும் கடன்களை அங்கீகரிப்பதில் தாமதம் காரணமாக விவசாயிகள் இச் செயற்திட்டத்தை மேற்கொள்ள மறுக்கின்றனர். | தாமதத்தை இழிவுபடுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் 2019 பெப்ரவரி அளவில் செயற்திட்ட தரப்பினர்கள் இணங்கியிருந்த போதிலும் பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை உரிய காலத்தில் அடைந்து கொள்ள நிகழ்ச்சித்திட்ட தரப்பினர்கள் எவராலும் முடியாதிருந்தது. | | | | |
| (ஊ) | கறுவா பயிர்ச்செய்கை தொடர்பான உடன்படிக்கையின் 3 (உ) பந்தியின் பிரகாரம் கடன்களின் மீள்கொடுப்பனவிற்கு உத்தரவாதமளிப்பவராக செயற்படுத்துநர்கள் செயற்பட வேண்டும். சில பயனாளிகள் தவணைப்பணம் செலுத்த தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இதனால் மிகுதி கடன் தொகையை விடுவிப்பது செயற்படுத்துநர் வங்கியால் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், செயன்முறைப்படுத்தும் நிலையம் மேற்படி உடன்படிக்கையின் 2(அ)(ii) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுத்துநர் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கம் தொடர்பாக செயன்முறைப்படுத்தும் நிலையம் எதுவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நடுத்தரம் | செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் பெரிதும் பாதிப்படையலாம். | இது தொடர்பாக பீஎம்யூ பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் பீஎவ்ஐ கடன் அறவீடுகளிற்கு பொறுப்பாக உள்ளது. வங்கி அதிகாரிகள் உள்ளடங்கிய அனைத்து முக்கிய பங்குதாரர்களின் பங்குபற்றலுடன் செயற்திட்ட அமுல்ப்படுத்தலின் போது பல கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இப்பிரச்சனை தீர்க்கப்பட்டது. எஸ்ஏபிபி இடமிருந்து அடிமட்ட மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை பின்தொடர்வதற்கு பெறுமதிச் சங்கிலி அணிதிரட்டல் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஒரு நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் ஒன்று செயன்முன்னேற்றத்தில் உள்ளது. மிகுதியை இனங்காண்பதற்கு செயற்படுத்துநரிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2019 ஒக்தோபர் 10 இல் உள்ளவாறு தேயிலை நிரப்புதல் செயற்திட்டத்தின் கீழ் 500 பயனாளிகள் | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட | காலத்திற்கு காலம் வங்கிகளால் விதிக்கப்படுகின்ற விதிகள் மற்றும் நிபந்தனைகள் | உடன்படிக்கைகளின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| இணங்காணப்பட்டிருந்த போதிலும் 119 பயனாளிகள் மாத்திரமே இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 31 தேயிலை பயிர்ச்செய்கையாளர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | | நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | காரணமாக விவசாயிகள் இவ்வாய்ப்பை தவறவிட்டிருந்தனர். இந் நோக்கத்திற்காக விவசாயிகள் தமது சொந்த நிதிகளை பயன்படுத்துகின்றனர். | உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) கரும்பு விவசாயிகளை வளப்படுத்துவதற்காக சனாதிபதி செயலாளருக்கும் கலோயா பிளான்ரேசன் கம்பனி லிமிடட்டிற்கும் இடையில் 2018 யூன் 28 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் எட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 4,000 கரும்பு விவசாயிகளுக்கு 12 மாத ஆகக்கூடிய மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியொன்றிற்காக 6.5 சதவீத விலைவிகிதத்தில் விவசாயி ஒருவருக்கு ரூபா 230,915 தொகையான கடன் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஒக்தோபர் 10 வரை ரூபா 858.82 மில்லியன் தொகையான கடன்களை 3,734 விவசாயிகள் மாத்திரமே பெற்றிருந்தனர். | | | | |
| (i) எதிர்பார்க்கப்பட்ட கடன் நடவடிக்கைகளின் கால எல்லையை கருத்தில் கொள்ளாமல் ஒரு தடவையில் நிகழ்ச்சித்திட்டத்தால் முழு அறுவடை கிரயமும் விடுவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 380,868,000 தொகை (102,000*3,734) | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | கரும்பு செயன்முறைப்படுத்தும் தொழிற்சாலையின் நாளாந்த தேவைப்பாட்டை அப்படையாகக் கொண்டு கரும்பு பயிர்ச்செய்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தை தொடர்வதற்கு பிரதானமாக இணங்கப்பட்டிருந்ததால் எஸ்ஏபிபி அங்கீகாரத்தை | கால எல்லையினுள் நிதிகளை பயன்படுத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் ஆகக்குறைந்தது 9 மாத காலப்பகுதிக்கு செயற்படுத்துநர் கம்பனியில் காணப்பட்டது. | | | எதிர்பார்த்து திட்டமிட்டவாறு கம்பனி அவர்களது பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருந்தது. கடன் கூறு தவறாக பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு காணப்படாததுடன் செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் அமுல்ப்படுத்தல் கட்ட காலப்பகுதியில் எடுக்கப்பட்ட விவசாயிகளின் ஒத்துழைப்பினை அடிப்படையாக கொண்டு கம்பனிக்கு கடன் கூறுகள் வழங்கப்பட்டிருந்தன. | |
| | (ii) | ஊடுபயிர் முறைக்காக விதைகளை கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்கு ரூபா 58.81 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஊடுபயிர் முறை நோக்கங்களுக்கு தேவையான விதைகளை செயற்படுத்துநர் கம்பனி வழங்கியிருக்கவில்லை. இதன் விளைவாக வழங்கப்பட்ட கடன் தொகை கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 10 இல் ஊடுபயிர் முறை நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் விவசாயிகளிடம் காணப்பட்டன. | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | கம்பனி விதைகளை கொள்வனவு செய்து விவசாயிகளுக்கிடையில் விதைகளை விநியோகித்திருந்தது. உள்ளக பயிர்ச்செய்கையில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்த விவசாயிகள் நியாயமான சிறந்த வருமானமொன்றை உழைத்திருந்தனர். | நிதிகளை முறையாக பயன்படுத்தி ஊடுபயிர் முறைக்காக விதைகளை வழங்குவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | முருங்கை பயிர்ச்செய்கை தொடர்பாக சனாதிபதி செயலாளர், Dasini Dehydration நிலையம் மற்றும் | | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட | ஓய்வற்ற நேர அட்டவணைகளை கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் | உடன்படிக்கைகளின் பிரகாரம் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை வங்கி என்பவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 2(ஈ) பிரிவு மற்றும் 03 ஆம் பட்டியலின் பிரகாரம் 250 பயனாளிகளுக்கு 2018 நவம்பர் மாதத்திலும் மிகுதி 250 பயனாளிகளுக்கு 2019 மே மாதத்திலும் மானியங்கள் மற்றும் கடன் வசதிகளை வழங்குவதற்கு பணவளிப்பு திட்டத்தின் முதலாம் கட்டம் தீர்மானித்திருந்த போதிலும் 97 பயனாளிகளுக்கு மாத்திரமே ரூபா 9.33 மில்லியன் தொகையான கடன் வசதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன. | | நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | கிடைப்பனவைப் பொறுத்து 4P உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்படுகின்றது. நில வேலைகளை ஆரம்பிப்பதற்கு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக காத்திருத்தல் காரணமாக பருவகாலம் இழக்கப்படும்.<br><br>சீஆர்ஜபி மற்றும் ஏனைய பிரச்சினைகள் சீபீஎஸ்எல் இல் விவசாயிகளை பதிவுசெய்வதை மோசமாக பாதித்திருந்ததுடன் இதன் காரணமாக 3-4 மாதங்களிற்கு முழுச் செயன்முறையும் மாற்றப்பட்டிருந்தது. | உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | முருங்கை பயிர்ச்செய்கை தொடர்பாக சனாதிபதி செயலாளர், Dasini Dehydration நிலையம் மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 3 (ஓ) பந்தியின் பிரகாரம் செயற்படுத்துநர் பீஎம்யூவிற்கு மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 28 வரை செயற்படுத்துநரால் எந்தவொரு செயன்முன்னேற்ற அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | 2019 திசெம்பர் அறிக்கை தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2020 இல் ஒழுங்காக அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உரிய கால எல்லையினுள் செயற்படுத்துநர்களால் மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | ரூபா 1.36 மில்லியன் கிரயத்தில் அரச அச்சக கூட்டுத்தாபனத்திடமிருந்து அச்சிடப்பட்ட 14,830 தன்னியக்க | நடுத்தரம் | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட | 4P பங்குடமைகளில் பௌதீகரீதியாக ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கிடையே | உரிய கால எல்லையினுள் பயனாளிகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| கண்காணிப்பு புத்தகங்களில் 4,547 புத்தகங்கள் மாத்திரம் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 10,283 புத்தகங்கள் 2020 மார்ச் 24 வரையிலும் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் களஞ்சிய வளாகங்களில் காணப்பட்டன. மேலும் கலோயா பிளான்ரேஷன் கம்பனி லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட 3,740 புத்தகங்கள் 2020 மார்ச் 24 வரையிலும் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | பகிர்ந்தளிப்பதற்காக பெருந்தொகை அச்சிடப்பட்டு களஞ்சியங்களில் காணப்படுகின்றது. | அச்சிடப்பட்ட தன்னியக்க கண்காணிப்பு புத்தகங்களை வழங்குவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |